# திருமுருகாற்றுப்படையில் சமயநெறிகள்
# Religious norms in thirumurukarttuppadai

**முனைவர் சு.சரவணகுமார்**

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைககழகக்
கல்லூரி,நாகம்பட்டி,தூத்துக்குடி – 628718

இறைவழிபாடு என்பது கல் தோன்றா காலத்தே தோன்றியது.பழங்காலத்தில் இயற்கையை வணங்கிய மனிதன் நாகரீகம் அடைந்த பின் உருவமாக வழிபடலானான்.மனிதனையும் சமயத்தையும் பிரித்தல் என்பது அரிது.உலகில் தோன்றிய அனைத்துச் சமய இலக்கியங்களும் மனிதனைப் பக்குவப்படுத்தின. நூற்றாண்டுகளாகத் தோன்றிய தெய்வத் தமிழ் நூல்களில் சமயக் கருத்துக்கள் மிகுந்துள்ளதைக் காணலாம்.குறிப்பாக திருமுருகாற்றுப்படையில் முருகக் கடவுளை அடையும் நெறிகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை சமயம்**

ஞாயிறு இவ்வுலகில் போற்றுவதற்குரிய தெய்வமாகத் தொன்மை காலந் தொட்டு வழிபடப்பட்டு வருகின்றது. நக்கீரர் ஞாயிற்றோடு முருகப் பெருமானை ஒப்பிட்டுக் கூறுகிறார்.

“உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி”
(திருமுருகு.1-3)

இதற்கு நச்சினார்கினியர் எல்லா சமயத்தாரும் புகழும் ஞாயிற்றை எனப் பொருளுரைப்பபார்.ஞாயிறு தேன்கூடு போன்ற தோற்றத்தை உடையது.

“விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய”
(திருமுருகு.299-300) இது போன்ற தோற்றத்தை உடையது ஞாயிறு என்று நக்கீரர் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

**திங்களும் முருகனும்**

திங்கள் விண்மீன்கள் புடைசூல அமைந்துள்ளது. இதனை முருகனுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.முருகப் பெருமான் தம் ஆறு முகத்தினைப் பெற்று அடியவர்களின் மனதில் காட்சிதரும் நிகழ்வினை புலவர்

“சேண் விளங்கு இயற்கை வாள்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப
தாஇல் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே”
(திருமுருகு.87-89)

என நிலவாகிய முருகக்கடவுளின் அருளில் அடியவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியைப் பெறுவர் என இயற்கையோடு ஒப்பிடும் வகையில் அழகாகப் பாடியுள்ளார். திங்கள் தண்ணிய ஒளியை நல்கி உயிரினங்களைத் தெளிவு பெறச் செய்கிறது. இப் பண்பு முருகப் பெருமான் முகத்தோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

“திங்கள் போலத் திசை விளங்கும்மே” (திருமுருகு.95-98)

**முருகனது சிறப்புகள்**

முற்காலத்தில் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கடவுளை வரையறை செய்தனர். இதனையே

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்"
(தொல்.பொருள்.நூ.5)

என முல்லை நிறக் கடவுளாகத் திருமாலையும் குறிஞ்சி நிறக் கடவுளாக முருகப் பெருமானையும் குறிப்பிடுகின்றார். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் மாயோன் பாம்பின் மீது துயில் கொண்ட இயல்பை மிகவும் சிறப்பாகச் சுட்டியுள்ளார்.

2

தொடக்க காலத்தில் வேலினை மட்டுமே இறைவனுடைய குறியீடாக வழிபட்டு வந்தனர். காலப் போக்கில் தமிழர்களின் தனிப் பெருந் தெய்வமாக முருகனைப் புகழ்ந்து வழிபட்டனர். இயற்கையோடு இயைந்து இன்ப வாழ்வு

நடத்திய மக்கள் இயற்கையின் அம்சமாக முருகப் பெருமானை வழிபடத் தொடங்கினர்.முருகப் பெருமானை புகழ்ந்து வழிபட்டனர்.ஞாயிறு உலக இருளைப் போக்கி ஒளியை உண்டாக்குவது போல முருகப் பெருமான் அடியவரின் அக இருளைப் போக்கி நிற்கிறான்.முருகக் கடவுள் பாறைகள் முதிர்ந்த, குளிர்ந்த கடல் கலங்கும்படி உள்ளே புகுந்து,அங்கே மாமரமாக நின்ற சூரனை வேலால் இரண்டாகப் பிளந்து வென்றான்.

"பார்முதிர் பனிகடல் கலங்க உள் புக்குச்
சூர்முதல் தடித்த சுடர் இலை நெடுவேல்"
(திருமுருகு.45-46)

**முப்பொருள்**

"நின்னாளந்ந தளிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தெனன்"
(திருமுருகு.278-279)

என்னும் அடிகளால் ஆசிரியர் முப்பொருளின் உண்மை நிலையினை சுட்டியுள்ளார்.தன்னை அடைந்த உயிர்களின் குற்றமாகிய ஆன்மப் பிணியினை நீக்கித் திருவடியின் இன்பமாகிய வீடுபேற்றை அளிப்பவன் இறைவன் என்பதை,

"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள"
(திருமுருகு.4)

என்னும் அடிகளில் நக்கீரர் தம் பதிவினைத் தருகிறார்.எளிமையான வழிபாடு,மனநிறைவான வேண்டுதல்,அன்பராய் விளங்கி நிற்பது,பிறர் நல் வாழ்வுக்கு உகந்தது செய்வது, ஆருயிர்கெல்லாம் அன்பு செய்வது,இத்தகு உயர்ந்த மாண்புடைய பண்பாளர்களே இறைவனின் அன்பர்களாக முடியும்.

**ஈகைப் பண்பு**

பாட்டுடைத் தலைவனின் உயர் சிறந்தது கொடைப் பண்பே. தன்னை நாடிவந்த அடியவர்களுக்கு அவர்கள் மனம் மகிழும்படியாகப் பொருளினைக் கொடுத்து ஆற்றுப்படுத்துவதாகும். "உறுகுறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்"என்ற வரிகள் முருகக் கடவுளின் கொடைப் பண்பை உணர்த்துகின்றது.

இன்றைய மனிதத்தை மறந்த இயந்திர உலகம், மன அமைதியைத் தேடுகின்றது.அத்தகு உயர்ந்த இறைநெறித் தத்துவங்களும் ஆன்மீக நெறிகளும் இணைந்த பாலமாய் முருகியம் திகழ்கின்றது.

**உள்ளமே கோயிலாய்!**

அன்பு உலகத்தை இயக்குவது; நெறிப்படுத்திச் செல்வது; கயவர்களையும் மனம் உருக வைப்பது; அன்பின் ஆற்றல் உலகில் எந்தப் பொருளுக்கும் இல்லை எனலாம்.இதனையே திருமூலர் அன்பு வேறு, இறை வேறு அன்று,அன்பே இறை; இறையே அன்பு என்ற தத்துவத்தினை தருகிறார்.

"ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங் கொடுத்தன்றே"
(திருமுருகு.93-94)

தன்மீது அன்புருகி வாழ்த்தும் அடியவர்களுக்கு வரமாகிய செல்வத்தை மனமகிழ்ந்து கொடுப்பவன்.

"ஆர்வலர் ஏத்த மேவரு நிலையிறும்
(திருமுருகு-221)

தன்னிடம் அன்புடையவர்,தன்னை வழிபட்டு நிற்பவன் மனதில் விரும்பி உறையும் இடமாகக் கொள்வான்.

**கோவிலிடங்கள்**

தமிழர்கள் முருகனைக் மலையிலும் காட்டிலும் ஆற்றின் கரையிலும் குளக்கரையிலும் முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் ஐஞ்சந்திகளிலும் அம்பலத்திலும் என புனிதமான எல்லா இடங்களிலும் வணங்கினர் என்பதைக் காணலாம்.

"காடும் காவும் கவின் பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்"
(திருமுருகு.223-224)

**திருநாமங்கள்**

நக்கீரர் முருகக் கடவுளை நீ வழிபடும் போது இந்த திருநாமங்களை வாயாரச் சொல்லி மனமாரத் துதிப்பாயாக என கட்டளையிடுகிறார்.

'அறுவர் பயந்த ஆறமர் செல்வ'(திருமுருகு.255)
'ஆல்கெழு கடவுட் புதல்வ'(திருமுருகு.256)
'மலைமகள் மகனே'(திருமுருகு.258)
'கொற்றவைச் சிருவ'(திருமுருகு.258)
'மாலை மார்ப'(திருமுருகு.261)
'குறிஞ்சிக் கிழவ'(திருமுருகு.267)
'இசைப் பேராளா', 'நூலறிபுலவ' (திருமுருகு.261)
'அறிந்தோர் சொல் மாலை'(திருமுருகு.262)
'வானோர் வணங்கும் தானைத் தலைவா'(திருமுருகு.260)

என கவிப் புலமையில் தனித் தமிழ்ப் புலவர்களில் தனித் தன்மை படைத்த இளங்கோவும் கம்பரும் பெறும் இடங்களில் நக்கீரர் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறார்.

5

**வழிபாட்டு முறைகள்**

பண்டையத் தமிழர்கள் தெய்வத் நம்பிகையை வழிபாட்டால் பெற்றனர்.பழைய வழிபாடு, வைதிக வழிபாடு,சிவ வழிபாடு,உருவ வழிபாடு,குறத்தி வழிபாடு, சடங்கு வழிபாடு,வெறியாட்டு மூலம் வழிபடும் முறை எனத் தமிழர்கள் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் செய்தும் பலியிட்டும் வழிபட்டு வந்தனர் என்பதனை திருமுருகாற்றுபடையில் காணலாம்.வானத்தை முட்டிய உயர்ந்த மலைகள் அமைந்த குறிஞ்சி நிலத் தலைவனே! பலரும் புகழ்வதற்குரிய சிறந்த மொழிகளைக் கூறும் புலவர்களின் தலைவனே! மிகச் சிறந்த பெருமையும் உயாந்த பெயருமுடைய முருகனே! விரும்புவோர்க்கு வேண்டுவன கொடுக்கும் பொன்னாபரணங்களைப் பூண்ட செந்நிறமுடையவனே!

"விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவி! …..

அலந்தோர்க்கு அறிக்கும் பொலன் பூண் சேஎய்''
(திருமுருகு.267-271)

இதனால் தமிழர்கள் கொண்டிருந்த தெய்வ நம்பிக்கையை காணலாம்.

மனிதனைச் செம்மைப் படுத்துவது சமய இலக்கியமே! முருகக் கடவுளை மனதுக்கண் மாசின்றி வழிபட்டால் அன்பர்களுக்குப் பேரின்பம் வழங்கி,வீடு பேரு அடையச் செய்வான் என்பது தெளிவு. மேற்கண்ட பதிவுகள் முருகியத்தின் சமய நெறிகளை, நக்கீரரின் திறம்பட்டச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.இத்தகைய சமய நெறிகள் மனிதனை வாழ்வாங்கு வாழ உயர்த்துவதற்கு உதவுபவை.நக்கீரர் 317 அடிகளில் சமய நெறிகளையும் தமிழரின் பண்பாட்டையும் உலகிற்குச் செய்திகளாக அடையாளப்படுத்தி உள்ளார்.

6

.